**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **C.C.No. 21/2017**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 2

Defence

Court

Name : L.விக்டோரியா லுர்துமேரி

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 09th February 2021.

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.09.2016 அன்று தேனி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் காலை 11.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது தகவலாளி நிலையத்தில் ஆஜராகிசொன்ன தகவலை பெற்று மேல் அதிகாரிகளுக்கு தகவலை தெரிவித்தும் நிலைய பொது நாட்குறிப்பில் 11.10 மணிக்கு பதிவு செய்தேன். அந்த தகவல் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் நிலையத்தில் இருந்த தலைமை காவலர்கள் 1507 திரு.ராமசாமி, 1161 திரு ரங்கசாமி, ஆகியோருடன் வழக்கிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தகவலாளியுடன் சம்பவ இடம் சென்று சம்பவ இடமான உத்தமபாளையம் தாலுகா, கோகிலாபுரம் பஸ் நிறுத்தம் அருகில் கஞ்சா என்னும் போதைப் பொருள் சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்த போது 12.30 மணிக்கு ஒரு வெள்ளை நிற சாக்குப்

பையுடன் வந்த நபரை தகவலாளி அடையாளம் காட்டி விட்டு மறையவும் நாங்கள் அவரை விசாரிக்க அவர் கோகிலாபுரம், 5 வது வார்டு, கிழக்கு தெருவை சேர்ந்த கருத்தக்கண்ணன் மகன் நாகராஜ் என்று கூறினார். தகவலாளி கூறியதும் இவர் கூறியதும் ஒன்றாக இருந்தது. பின்னர் எங்களை NIBCID போலீசார் என்று அறிமுகம் செய்து கொண்டு அவரிடம் தங்களை சோதனையிட வேண்டும் என்று தெரிவித்தும் மேலும் அவரிடம் தங்களை சோதனை செய்ய சொல்ல அருகில் உள்ள குற்றவியல் நடுவர் அவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்யச் சொல்ல தங்களுக்கு முழு உரிமை உண்டு என்று எடுத்துக் கூறியும் அதற்கு அவர் எனக்கு எங்கும் செல்ல விருப்பம் இல்லை என்றும் காவல் துறையினராகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன் பேரில் 12.35 மணிக்கு தனிநபர்கள் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் சாட்சிகளாகிய தலைமை காவலர்கள் 1507 திரு.ராமசாமி, 1161 திரு ரங்கசாமி ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்த போது அவரிடம் உலர்ந்த கஞ்சா இருந்தது. அந்த சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் சாட்சிகளிடமும், எதிரியிடமும் கையொப்பம் பெறப்பட்டது. எதிரிக்கு ஒரு நகல் கொடுக்கப்பட்டது. நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க 5.00 கிலோ கிராம் கஞ்சா இருந்தது. பின்னர் எதிரியை விசாரித்து 13.10 மணிக்கு எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரியிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெறப்பட்டது. 14.00 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் படுத்திய கஞ்சாவை அ.சா.ஆ.3 அத்தாட்சியில் போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் சாட்சிகளிடமும், எதிரியிடமும் கையொப்பம் பெறப்பட்டது. மாதிரி மற்றும் பகுப்பாய்விற்காக தலா 25 கிராம் கஞ்சாவை இரு காக்கிநிற கவரில் உள்ள பொட்டலங்களில் நூலால் சுற்றி வழக்கு விவர சிலீப் ஒட்டி S1, S2 என குறியிட்டு NIB சீல் வைக்கப்பட்டது. மாதிரிக்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட S1, மற்றும் S2 என குறியீடு செய்யப்பட்ட கஞ்சா பொட்டலம் சா.பொ.1 மற்றும் 2. மாதிரிக்கு எடுத்தது போக மீதமுள்ள கஞ்சாவை அதே சாக்குப்பையில் சணலால் கட்டி பி1 என குறியீடு செய்தேன். அந்த மீதமுள்ள கஞ்சா சா. பொ.3 ஆகும். பின்னர் அரசு அனுமதியின்றி எதிரி நாகராஜ் கஞ்சா வைத்திருந்ததால் 14.40 மணிக்கு எதிரியை கைது செய்தும் கைது பற்றிய சலுகைகளை எடுத்துக்கூறியும், உறவினர்களுக்கு

தகவல் தெரிவித்தும் 15.40 மணிக்கு நிலையம் கொண்டு வந்தேன். கைது நமூனா அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் தேனி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு குற்ற எண்.156/2016, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையை உத்தமபாளையம் கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் 57 NDPS Act ன் அறிக்கையையும், முதல் தகவல் அறிக்கை நகலையும், எதிரியையும் வழக்கின் மற்ற ஆவணங்களையும் காவல் ஆய்வாளர் திரு.முத்தரசு அவர்களின் புலன் விசாரணைக்காக பார்வைக்கு வைத்தேன். அந்த 57 NDPS Act ன் படி விரிவான அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் படிவம் 95 ல் தயார் செய்து அதையும் காவல் ஆய்வாளர் அவர்களின் வழக்கின் விசாரணைக்காக வைத்தேன். அந்த படிவம் 95 அ.சா.ஆ.8 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தகவல் காலை 11.00 மணிக்கு கிடைத்தது. காலை 11.10 மணிக்கு நிலைய பொது நாட் குறிப்பில் தகவலை பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன். முதல் தகவல் அறிக்கை முதல் பக்கத்தில் காலம் 3 சி-யில் 15.40 மணிக்கு பொது நாட் குறிப்பில் பதிவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எனக்கு கிடைத்த தகவலின் படி எதிரியின் பெயரோ, முகவரியோ, அடையாளமோ சொல்லப்படவில்லை என்றால், சரிதான். எனக்கு கிடைத்த தகவலை நான் பதிவு செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. தகவலை நான் தனி அறிக்கையாக பதிவு செய்ததாக குறிப்பாக சொல்லவில்லை, தனி அறிக்கை அனுப்பியதாக சொல்லியுள்ளேன். தகவலை உயர் அதிகாரிக்கு அனுப்பியதாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், உயர் அதிகாரிக்கு தெரிவித்ததாக மட்டும் சொல்லியுள்ளேன், தகவல் எந்த அதிகாரிக்கு அனுப்பப்பட்டது என்ற விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திற்கு காவல் நிலையத்திலிருந்து செல்லும் போது தனிநபர் சாட்சிகளை அழைத்து செல்லவில்லை. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 38 கீ.மீ தூரம் இருக்கும். நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு எப்படி வந்தோம், எந்த வாகனத்தில் வந்தோம் என்று வழக்கின் எந்த ஆவணத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். சம்பவ இடம் கோகிலாபுரம் பஸ் நிறுத்தம்

என்றால், சரிதான். சம்பவ இடம் போக்குவரத்து மிகுந்த இடம் என்றால், சரிதான். சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகளை அழைத்தும் யாரும் வரவில்லை. வரமறுத்த சாட்சிகளின் மீது குற்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை என்பதற்கும் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்பதற்கும் வித்தியாசம் உள்ளது. நான் எந்த வகையான தராசு கொண்டு சென்றேன் என்று விசாரணையில் குறிப்பாக சொல்லவில்லை. நான் எலக்ட்ரானிக் தராசு தான் கொண்டு சென்றேன். வழக்கு சொத்தான கஞ்சா மொத்தமாக எடைப் போட்டப்பட்டதா அல்லது கலந்து எடை போடப்பட்டதா, எத்தனை முறை போடப்பட்டது, யாரால் எடை போடப்பட்டது என்ற விவரங்கள் வழக்கு ஆவணங்களில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால், ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்று சாட்சி கூறுகிறார். மாதிரிக்கு எடுத்த கஞ்சா மொத்த எடையிலிருந்து தலா 25 கிராம் எடுக்கப்பட்டு நேரடியாக காக்கி கவரில் போடப்பட்டது. அத்தாட்சியில் சம்பவ இடம் பஸ் நிறுத்தம் அருகில் என்று சொல்லப்பட்டுள்ளது குறிப்பாக எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால், பஸ் நிறுத்தம் அருகில் என்று மட்டும் தான் அத்தாட்சியில் சொல்லப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். அத்தாட்சியில் சொத்துக்களின் மீது NIB சீல் வைத்ததாக சொல்லப்படவில்லை. அது போன்று அத்தாட்சியில் விவரங்கள் அடங்கிய சிலீப் ஒட்டப்பத்தாக சொல்லப்படவில்லை என்றால், சரிதான், ஆனால் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன். அத்தாட்சியில் எதிரி மற்றும் சாட்சிகள் கையெழுத்து போட்டதாக சொல்லப்படவில்லை என்றால், கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளதாக சாட்சி கூறுகிறார். அத்தாட்சியில் எதிரி மற்றும் சாட்சிகள் கையெழுத்து கீழே தேதி போடப்படவில்லை என்றால், சரிதான். சம்பவ இடத்தில் ஆவணங்கள் அனைத்தும் கணிணியில் தயார் செய்தேன் என்றால், என்னுடன் வந்தவர்களும் ஆவணங்கள் தயார் செய்வதற்கு உதவியாக இருந்தார்கள். ஆவணங்களில் நானும், என்னுடன் வந்தவர்களும் கையால் எழுதினார்கள். வழக்கு சொத்தானது நீதிமன்ற நடுவரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார் என்று சொன்னால், சரிதான், ஆனால் நான் வழக்கின் சொத்துக்களையும், எதிரியையும் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். வழக்கு சொத்து முதன் முறையாக 13.10.2016 அன்று தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால், காவல் ஆய்வாளரால் 13.10.2016 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சாட்சி கூறுகிறார். முதல் தகவல்

அறிக்கையிலோ, அல்லது ஆய்வாளர் விசாரணையிலோ பிரிவு 57 NDPS Act ன் படியான விரிவான அறிக்கையை நான் எழுத்து மூலமாக தயார் செய்ததாக சொல்லப்படவில்லை என்று சொன்னால், சரிதான், ஆனால் 57 NDPS Act ன் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மாதிரிக்கு எடுத்த சான்று பொருள் S1,S2 என்று குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1,2 ல் குற்ற எண்.156/2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். சா.பொ.3 ல் விவரங்கள் அடங்கிய படிவம் எதுவும் ஒட்டப்படவில்லை என்றால், சரிதான், பி1 என்று குறியீடு மட்டும் செய்யப்பட்டுள்ளது. சா.பொ.3 ல் நானோ, சாட்சிகளோ, எதிரியோ கையெழுத்து போட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். சா.பொ 1 முதல் 3 ல் நிலையம் வந்த பிறகு தான் குற்ற எண் பதிவு செய்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். சா.பொ.1,2 ல் நான்கு விதமான மையினால் எழுதப்பட்டுள்ளது, முதன் முதலில் எழுதியது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். சான்று பொருட்கள் 1 முதல் 3 ல் ஆய்வாளர் கையொப்பமோ, மற்றும் நிலைய முத்திரையோ இல்லை என்றால், சரிதான். பொதுவாக சான்று பொருளில் ஆய்வாளர் கையெழுத்து எதுவும் போடுவதில்லை. நான் சொன்ன நேரத்தில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை பார்க்கவில்லை என்றாலும், அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து பின்னிட்டு புள்ளிவிவர கணக்கிற்காக எதிரியின் மீது உண்மைக்கு மாறாக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால், சரியல்ல. தனிநபர் சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால், காண்பிக்கப்படவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு வாசித்துக்காட்ட சாட்சியால் சரி
என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.